6th March 1965]

ரிக்கார்ட்களை ஒப்புவிப்பதில் தாமதம் ஏற்படுகிறதே தவிர, மற்றொன்றும் இல்லை. 23 வருடங்களுக்கு என்கம்பரன்ஸ் சர்டிபிக்கட் வேண்டுமென்று சொல்கிறார்கள். அதைக் குறைத்து 12 வருடமாகச் செய்யலாமா என்ற யோசனையும் இருந்து கொண்டிருக்கிறது.

UNSTARRED QUESTIONS.

அரக்கோணம் நகராட்சியின் ஆணையாளர்

17 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரக்கோணம் நகரசபை ஆணையாளர் மீது 10—9—1963, 14—10—1963, 21—10—1963 தேதிகளில் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்ட புகார்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததா?

(இ) அதன் விவரமென்ன?

பதில்—(அ) & (இ) அரக்கோணம் நகராட்சியின் முன்னாள் ஆணையாளர் அவருடைய நிலையான மானேஜர் பதவிக்கு ஏற்கனவே தள்ளப்பட்டார்.

(*a*) & (*b*) The former Municipal Commissioner, Arkonam, has already been reverted to his original post as Municipal Manager.

செய்யாறு மாவட்ட கழக உயர்நிலை பள்ளியின் கட்டிட நிதி

18 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், செய்யாறு வட்டம், செய்யாறு மாவட்டக் கழக ஆண்கள் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் மீது கட்டிட நிதிக் கையாடல் முதலியவைப்பற்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டி 1964-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27-ந் தேதியில் ஏதேனும் முறையீடு வந்துள்ளதா?

(இ) ஆமெனில் அதன்மீது அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை யாது?

பதில்—(அ) & (இ) 1964-ம ஆண்டு ஜனவரி மாதம் 10-ந் தேதியிட்ட மனு ஒன்று 1964-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ந் தேதியில் கிடைத்தது. செய்யாறு திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிட்ட, அச்சிட்ட துண்டு வெளியீடு ஒன்றில் மேற்படி தலைமையாசிரியரைப் பற்றிக் குறிப்பிட்டிருந்த புகார்களை அரசாங்கம் ஏற்கெனவே பரிசீலனைச் செய்து அவை உண்மையல்லவென்று அறிந்ததால் 1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் 10-ந் தேதியிட்ட மேற்படி மனுவின் மீது எந்தவிதமான நடவடிக்கை எடுப்பதும் அவசியமில்லையென்று கருதப்பட்டது.

(*a*) & (*b*) A petition, dated 10th January 1964, was received on 28th February 1964. As the Government had already examined the allegations against the headmaster referred to with reference to a printed pamphlet issued by the D.M.K. party of Cheyyar and found them to be not true, no action was considered necessary on the petition, dated 10th January 1964.

[6th March 1965

அச்சுத்துறை எழுதுபொருள்கள் வழங்கும் உரிமை

19 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஊராட்சி மன்றங்களுக்கான பல்வேறு அச்சுத்துறை, எழுது பொருள்களை வழங்கும் உரிமை சென்னை "ஹொ அண்டு கோ"விற்கு அளித்திருப்பது போல் வேறு எத்துறைக்காவது, வேறு எந்த அச்சகத்திறகாவது இத்தகைய பொருள்களை வழங்கும் உரிமை வழங்கப் பட்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அத்துறைகள் எவை, எவை ? அவ்வச்சகங்கள் எவை எவை ?

பதில்—(அ) 1964–65-ம் ஆண்டுக்காகப் பஞ்சாயத்துகளுக்குத் தேவைப் படும் படிவங்களை அச்சிட்டு வழங்கும் வேலை மெஸர்ஸ் ஹோ அண்டு கம்பெனியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த வேலை வேறு எந்த அச்சகத்திற்கும் கொடுக்கப்படவில்லை. பஞ்சாயத்துக்கள் தங்களுக்கு வேண்டிய எழுதுபொருள்களைப் பஞ்சாயத்து நிதியிலிருந்தே வெளி மார்க்கெட்டில் வாங்கிக்கொள்ளலாம்.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

(*a*) The work of printing and supply of forms required by the Panchayats for 1964-65 has been entrusted to Messrs. Hoe and Company. No other press has been entrusted with this work. The Panchayats are empowered to purchase in the open market from their own funds the articles of Stationery required by them.

(*b*) Does not arise.

மும்மொழித் திட்டம்

20 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மும்மொழித் திட்டப்படி, தமிழ்நாட்டில் மூன்றுவது மொழியாக தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய இவற்றுள் ஒன்றை ஏற்றுப் படிக்கும் மாணவர்கள் மொழிவாரியாக எத்தனை பேர் ?

(இ) அதற்காகப் பணிபுரியும் அம்மொழி ஆசிரியர்கள் மொழிவாரி யாக எத்தனை பேர் ?

பதில்—(அ) & (இ)

District Educational Officers/Inspectresses of Girls' Schools (Jurisdiction).	Telugu.		Malayalam.		Kannada.	
	Pupils	Teachers.	Pupils	Teachers.	Pupils	Teachers.
District Educational Officer, Nagercoil.	..	..	1,002	36	..	..
District Educational Officer, Virudhunagar.	48	1	..	..	..	..
District Educational Officer, Pollachi.	..	..	33	1	..	..
District Educational Officer, Saidapet.	262	9	..	..	..	..
District Educational Officer, Dharmapuri.	657	10	..	..	..	..
Inspectress of Girls' Schools, Tirunelveli.	..	..	..	..	..	..
District Educational Officer, Vellore.	504	4	..	..	..	..
Total	1,471	24	1,035	37	..	..

6th March 1965]

Albizia trees

21 *Q.*—Sri M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) in which part of our State Albizia trees required for catamarans are grown;

(*b*) whether they are sufficient for the requirements of our State?

A.—(*a*) In Salem and Coimbatore districts.

(*b*) Not sufficient.

(அ) சேலம், கோவை மாவட்டங்களில் வளர்க்கப்படுகிறது

(இ) தேவைக்குப் போதுமானதல்ல.

புன்னக்காயலை மீன்பிடித் துறைமுகமாக்கல்

22 கேள்வி.—திரு. எம்.எஸ். செல்வராஜன் : கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள புன்னக்காயலை மீன்பிடித் துறைமுகமாக விருத்தி செய்யும் திட்டமிருக்கிறதா ?

(இ) திருச்செந்தூரில் கூட்டுறவு மீன் விற்பனை யூனியன் ஆரம்பிக்கும் திட்டமிருக்கிறதா ?

பதில்—(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள புன்னக்காயல் கழிமுகத்தை மீன்பிடித் துறைமுகமாக அபிவிருத்தி செய்யும் விஷயம் ஆலோசனையிலிருந்து வருகிறது.

(இ) திருச்செந்தூரில் மீன் விற்பனைக் கூட்டுறவுச் சங்கமொன்று ஏற்கெனவே இயங்கிவருகிறது.

A.—(*a*) The question of developing Pannakayal Estuary in Tirunelveli district for fishing operation is under consideration.

(*b*) A fish marketing union is already functioning at Tiruchendur.

அரிசன நல இலாகா பாடசாலைகளுக்கு ஆசிரியர் தேர்வு

23 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரிசன நல இலாகாவின் மேற்பார்வையிலுள்ள பாடசாலைகளில் வேலை செய்துவிட்டுப் போன (ousted) ஆசிரியர்கள் மீண்டும் வேலை தேடிகொடுக்கும் ஸ்தாபனத்தில் (Employment Exchange) பதிவு செய்துதான் அரிசன இலாகாவின் மேற்பார்வையிலுள்ள பள்ளிகளில் வேலை பெறமுடியுமா ?

(இ) அவர்கள் பின்னர் ஏற்படும் காலி ஸ்தாபனங்களில் நேரடியாகவே வேலைக்கு அமர்த்திக் கொள்ளப்படுகின்றனரா ?

A—

(*a*) Yes.

(*b*) No.

(அ) ஆம்

(இ) இல்லை

[6th March 1965

மைத்தலை மன்றுடி கண்மாய் (மதுரை மாவட்டம்)

24 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பெரியகுளம் தாலூகாவில் மைத்தலை மன்றுடி கண்மாய் மராமத்து செய்யப்பட்டதா ?

(இ) ஆமென்றால் எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டது ?

பதில்—(அ) ஆம்.

(இ) இக் கண்மாயின் முழுக்கொள் அளவினை (F.T.L.) உயர்த்துவதற்கும், அதன் கீழ்ப் பாசனம்பெறும் நிலப்பரப்பினை விரிவுபடுத்துவதற்குமாக மொத்தம் முப்பத்திநான்காயிரத்து முன்னூற்றுதொண்ணூற்று நான்கு ரூபாய் (ரூ. 34,394) செலவழிக்கப்பட்டது.

A.—(*a*) Yes.

(*b*) A total expenditure of rupees thirty-four thousand, three hundred and ninty-four (Rs. 34,394) was incurred on raising the F.T.L. of the tank and extending the irrigable area under the tank.

சாலைகள் (விருத்தாசலம் தாலூகா)

25 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விருத்தாசலம் தாலூகா, நல்லூர் பஞ்சாயத்து யூனியனில் விருத்தாசலத்தில் இருந்து தொழுதூர் சாலையையும், விருத்தாசலம்—வேப்பூர் சாலையையும் இணைக்கும் இறையூர்—சிறப்பாலூர்—நல்லூர் சாலையை சீர்படுத்த (Sugarcane Cess Funds)-ல் இருந்து நிதி ஒதுக்கி வேலை செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

பதில்—கரும்பு சாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இந்த சாலையைச் சீர்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசமில்லை.

A.—There is no proposal to improve this road under the Sugarcane Road Development Scheme.

Fair price shops (North Arcot)

26 *Q*.—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. Minister for Food be pleased to state—

(*a*) the number of fair price shops sanctioned and functioning respectively in the whole of North Arcot district;

(*b*) the details of the Municipal towns where the shops have been opened; and

(*c*) the quantity of rice issued to the public through these shops in each of the Municipal towns in that district?

A.—

(*a*)	Number sanctioned	21
	Number functioning	20
(*b*)	(1) Vellore	3
	(2) Ambur	1
	(3) Gudiyatham	5
	(4) Arkonam	3
	(5) Tirupattur	4
	(6) Vaniyambadi	1

6th March 1965]

(c) The quantity of rice issued to public is 2 litres per family per day.

(அ) உத்திரவானது	..	21
நடைமுறையில் உள்ளது	..	20
(இ) 1. வேலூர்	..	3
2. ஆம்பூர்	..	1
3. குடியாத்தம்	..	5
4. அரக்கோணம்	..	3
5. திருப்பத்தூர்	..	4
6. வாணியம்பாடி	..	1

(இ) குடும்பம் ஒன்றுக்கு ஒரு நாளைக்கு 2 லிட்டர் அரிசி வீதம் வழங்கப்படுகிறது.

மதுவிலக்கு சட்டத்தின்கீழ் கைது

27 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-ம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களில் மட்டும் மதுவிலக்கு சட்டத்தின்கீழ் தமிழ்நாடு முழுவதும் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(இ) இவர்களில் எத்தனைபேர் மீது வழக்கு தொடரப்பட்டது ?

A—

	January 1964.	February. 1964.
(a)	10,423	7,527
(b)	10,310	7,521

Prohibition offences

28 *Q*.—Sri A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of prohibition offences detected in 1963 and also for the period ending 31st August 1964 in Kanyakumari district; and

(b) the total number of cases ended in conviction?

A—

	1963	1964 (up to 31st August 1964.)
(a)	2,893	1,787
(b)	2,272	1,436

Acquisition of land for construction of houses for Harijans (Tiruttani taluk)

29 *Q*.—Sri C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of cases pending sanction of the Government for land acquisition for providing houses for Harijans in Tiruttani taluk in Chingleput district; and

(b) the villages that will be provided with house-sites for Harijans in Tiruttani taluk in Chingleput district during 1964–65?

A—

(a) 6.

ஆறு

[6th March 1965

(b) (1) Atikalapattu.
(2) Chinnamandali.
(3) Ayyeneri.

(1) ஆத்திக்கால்பட்டு
(2) சின்னமண்டலி
(3) அய்யநேரி

Assignment of waste lands (Chingleput district)

30 *Q*.—Sri C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the total assessed waste land in Tiruttani and Pallipet sub-taluks in Chingleput district;

(*b*) the number of applications pending in the taluk offices of Tiruttani and Pallipet requesting for assignment of the assessed waste land; and

(*c*) the action taken thereon?

A—

Extent of total assessed waste lands (dry and wet) in—

	Tiruttani taluk. Ac.	c.	Pallipet sub-taluk. Ac.	c.
(*a*)	9,321	81	3,600	89
(*b*)	1,060	00	492	00

(*c*) An extent of 214.08 acres in all has been assigned to landless poor persons since 1st July 1963 in Pallipet sub-taluk.

The District Revenue Officer, Chingleput, is examining the proposal of the Revenue Divisional Officer, Tiruvellore, for the employment of special staff for the work connected with assignment in view of the large number of pending applications. The District Revenue Officer has, however, instructed the Tahsildar, Tiruttani and Independent Deputy Tahsildar, Pallipet, to bestow their attention to this branch of work and to complete the work expeditiously.

தீர்வை விதிக்கப்பட்ட தரிசு நிலங்களின்
(புன்செய், நன்செய்) மொத்தப் பரப்பு.

	திருத்தணி தாலூகா எக்கர்.	செண்ட்.	பள்ளிப்பட்டு துணைத் தாலூகா எக்கர்.	செண்ட்.
(அ)	9,321	81	3,600	89
(இ)	1,060	00	492	00

(உ) பள்ளிப்பட்டு துணைத் தாலூகாவில் 1963-ம் வருடம் ஜூலை மாதம் 1-ம் தேதியில் இருந்து மொத்தம் 214·08 எக்கர் நிலம், நிலமற்ற ஏழைகளுக்கு பட்டா செய்துக் கொடுக்கப்பட்டுள்ளது. பட்டா செய்து தரும்படி அனுப்பியுள்ள ஏராளமான மனுக்கள் இன்னும் தீர்வு காணமற் இருப்பதால், இதற்கு என தனியாக பணியாளர்களை அமர்த்த வேண்டும் என்று திருவள்ளூர் ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி அனுப்பிய திட்டத்தை செங்கற்பட்டு மாவட்ட ரெவின்யூ அதிகாரி பரிசீலித்து வருகிறார்.

இத்துறையில் தங்கள் கவனத்தை செலுத்தி விரைவில் இவ்வேலையை முடிக்கும்படி மாவட்ட ரெவின்யூ அதிகாரி அவர்களுக்கு உத்திரவு பிறப்பித்து உள்ளார்.

6th March 1965]

"Tamilagam", Ootacamund

31 *Q*.—SRI A. RAGHAVA REDDI: Will the Hon. the Minister for Food be pleased to state the names of persons to whom rooms were allotted in 'Tamilagam', Ootacamund, during May 1964 and the nature of their stay?

A.—Particular are given in the statement [a] placed on the Table of the House.

இச்சபையில் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் [a] விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

நெல், அரிசி விற்பனை விலைகள்

32 கேள்வி.—திரு. எ. சுவாமிதாஸ்: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாட்டில் நெல்லுக்கும் அரிசிக்கும் ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தெந்த ரகத்திற்கு என்னென்ன விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது?

பதில்.—

உணவு-வேளாண்மைத் துறையில் 1964-ம் வருடம் அக்டோபர் மாதம் 17-ம் தேதியில் வெளியான 2858-வது எண் அரசாங்க ஆணையை பார்க்கும் படி அங்கத்தினரைக் கேட்டுக்கொள்கிறேன். அதில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நெல்லின் உச்ச மொத்த விற்பனை விலைகள், அரிசியின் உச்ச மொத்த விற்பனை விலைகள், சில்லறை விற்பனை விலைகள் இவை சம்பந்தமான முழு விவரங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. அந்த ஆணையின் நகல் ஒன்று சட்டப்பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

The attention of the member is invited to G.O. Ms. No. 2858, Food and Agriculture, dated 17th October 1964 in which full details of the maximum wholesale prices of paddy and maximum wholesale and retail prices of rice in each district have been notified. A copy of the Order has been placed on the table of the Legislative Secretariat Library.

Collection of firewood from forests (Kanyakumari district)

33 *Q*.—SRI A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether permission was granted to the poor people to collect firewood from the forests of Kanyakumari district;

(*b*) whether any resolution was sent by the Kanyakumari District Development Council; and

(c) if so, what action was taken?

A.—(*a*) Yes. Free permits for the collection of firewood from the forests of Kanyakumari and Tirunelveli districts were issued up to 31st March 1964. The system was discontinued beyond 31st March 1964 in the interests of forest conservancy.

(*b*) & (*c*) Yes.

The Collector of Kanyakumari was informed that the request for lifting the ban imposed on the system of free removal of firewood and faggot wood from the Reserved Forest of Kanyakumari district cannot be complied with in the interest of forest conservancy.

---

[a] Printed as Appendix on pages 6

[6th March 1965

(அ) ஆம். கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள காடுகளிலிருந்து விறகுகளைப் பொறுக்குவதற்கு 1964-ம் வருடம் மார்ச் மாதம் 30-ம் தேதி வரையில் இலவச அனுமதி வழங்கப்பட்டிருந்தது. காடுகள் காக்கப்பட வேண்டியதன் அவசியத்தை முன்னிட்டு இந்த அனுமதி 1964-ம வருடம் மார்ச் மாதம் 31-ம் தேதிக்குப் பிறகு நிறுத்தப் பட்டது.

(இ), (உ) : ஆம். கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ரிசர்வ் காட்டிலிருந்து விறகையும் சுள்ளிகளையும் இலவசமாகப் பொறுக்குவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கிவிடும்படி முறையீடு செய்துகொள்ளப் பட்டது. காடுகள் காக்கப்பட வேண்டியதன் அவசியத்தை முன்னிட்டு அதை அனுமதிக்க இயலாதென்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

Bus stand for Nagercoil

34 *Q.*—Sri A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the lands necessary for construction of a bus stand in Nagercoil Municipality have been acquired;

(*b*) when will the work be completed?

A.—(*a*) Not yet.

(*b*) The work is likely to be completed in 1965–66.

(அ) இன்னும் முடிவுறவில்லை.

(இ) இவ்வேலை 1965–66-ல் முடிவுறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

Fishing boats—Supply in Kanyakumari district

35 *Q.*—Sri A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) the number of mechanised fishing boats supplied to the Fishermen in Kanyakumari district; and

(*b*) whether the Government have taken steps for the repair of the boats plying in that area ?

***A.*—**

(*a*)

Year.	Boat.
1957—58	2
1958—59	6
1959—60	12
1960—61	1
1961—62	17
1962—63	13
1963—64	18
1964—65 (up to date)	9
Total ..	78

(*b*) A maintenance-*cum*-service Centre under the charges of a Foreman has been started at Colachel from December, 1963 for repairing the boats plying in the area.

6th March 1965]

(அ)

ஆண்டு.			படகு.
1957-58	..	..	2
1958-59	..	..	6
1959-60	..	..	12
1960-61	..	..	1
1961-62	..	..	17
1962-63	..	..	13
1963 64	..	..	18
1964-65 (நாளது தேதிவரை)			9
	மொத்தம்	..	78

(இ) அப் பகுதியில் செல்லும் படகுகளைப் பழுது பார்ப்பதற்காக, 1963 டிசம்பர் மாதத்திலிருந்து கொளச்சல் பகுதியில் போர்மன் ஒருவரின் பொறுப்பில் படகுப் பராமரிப்புப் பழுது பார்த்தல் நிலையம் ஒன்று தொடங்கப்பட்டிருக்கிறது.

36 *Q.*—SRI A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) the number of applications received from Kanyakumari district in 1963 and in 1964 for the supply of fishing boats; and

(*b*) whether all the applicants belong to the fishing community?

A.—(*a*) From 1st January 1963 to 31st December 1963—187 applications.

From 1st January 1964 to 30th September 1964—3 applications.

(*b*) Yes.

(அ) 1-1-1963-லிருந்து 31-12-1963 வரை 187 மனுக்கள்.
1-1-1964-லிருந்து 30-9-1964 வரை 3 மனுக்கள்.

(இ) ஆம்.

அமைச்சர்கள் சுற்றுப்பயணம்

37 கேள்வி—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964 ஆகஸ்ட் மாதம் அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்தார்களா ?

(இ) ஒவ்வொருவருக்கும் ஆன சுற்றுப்பயண செலவு எவ்வளவு ?

பதில்—

(அ) கனம் சுகாதார அமைச்சரைத் தவிர மற்ற எல்லா அமைச்சர்களும் சுற்றுப்பயணம் செய்தார்கள்.

(*a*) All the Honourable Ministers except the Honourable Minister for Public Health undertook tours.

(இ) ஒவ்வொருவருக்கும் ஆன சுற்றுப்பயண செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

	தொகை
	ரூ. பை.
கனம் முதல் அமைச்சர்	766.00
கனம் தொழில் அமைச்சர்	838.27
கனம் உள்துறை அமைச்சர்	1,300.84
கனம் உணவு அமைச்சர்	1,547.37
கனம் சுகாதார அமைச்சர்	(சுற்றுப் பயணம் மேற்கொள்ள வில்லை)
கனம் கூட்டுறவு அமைச்சர்	1,498.36
கனம் விளம்பரத்துறை அமைச்சர்	826.00
கனம் ஸ்தலஆட்சித்துறை அமைச்சர்	1,622.88

(*b*) The amount of Travelling Allowance and Daily Allowance drawn by each Minister is furnished below :—

	Amount of Travelling Allowance and Daily Allowance drawn.	
	RS.	P.
Honourable Chief Minister	766	00
Honourable Minister for Industries	838	27
Honourable Minister for Home	1,300	84
Honourable Minister for Food	1,547	37
Honourable Minister for Public Health ..	(Did not undertake any tour)	
Honourable Minister for Co-operation	1,498	36
Honourable Minister for Information and Publicity.	826	00
Honourable Minister for Local Administration ..	1,622	88

தக்காவி கடன், புதுக்கோட்டை.

38 கேள்வி.—**திரு. பி. முருகையன் :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

புதுக்கோட்டை டிவிஷனில் கொடுக்கப்பட்ட தக்காவி கடன்கள் தனிப்பட்டவர்களிடமிருந்து வசூலிக்காது சலுகை கொடுக்கப்பட்டு உள்ளதா ?

A.—No.

இல்லை.

கொத்தமங்கலம் கிராமம்—வெள்ளத் தடுப்புச் சுவர்

39 கேள்வி.—**திரு. பி. முருகையன் :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

புதுக்கோட்டை பகுதியில் ஓடும் வெள்ளாற்றின் இடது கரையில் உள்ள கொத்தமங்கலம் கிராமத்தில் மழைக்காலங்களில் ஆற்று தண்ணீர் குடியிருப்புப் பகுதிக்குள் புகுந்து அரிப்பு ஏற்படுவதைத் தடுக்க தடுப்புச்சுவர் கட்ட உத்தேசமுண்டா ?

A.—No

இல்லை.

6th March 1965]

ஆரணியில் தீயணைக்கும் நிலையம்

40 கேள்வி.—**திரு. சி. கோதண்டராம பாகவதர்:** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆரணி நகராட்சி எல்லைக்குள் "தீயணைக்கும் படை நிலையம்" ஒன்று ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

பதில்—

ஆம், ஆனால் தற்பொழுது ப்ரையாரிட்டி லிஸ்டின்படி (**Priority list**) வேறு சில இடங்களில் முதலில் தீயணைக்கும் நிலையங்கள் ஏற்படுத்திய பிறகுதான் ஆரணியில் ஒரு நிலையத்தை ஏற்படுத்தவேண்டும். இதனால் இதை ஏற்படுத்த இன்னும் கொஞ்ச காலம் செல்லும்.

Yes. But it will take some time as according to the existing priority list, Fire Stations have to be opened in some other places before a fire station is opened at Arni.

[*Note.*— **An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—LANGUAGE OF ANSWERS TO QUESTIONS.

திரு. சா. கணேசன்: கனம் சபாநாயகர் அவர்களே, கேள்விகளை தமிழில் கொடுத்தால் தமிழில் பதில் சொல்ல வேண்டும், ஆங்கிலத்தில் கொடுத்தால் ஆங்கிலத்தில் பதில் சொல்ல வேண்டுமென்று இங்கு முன்பே அமைச்சர்கள் இசைந்திருக்கிறார்கள். ஆனால் இன்று பெரும்பாலான கேள்விகள் தமிழில் இருந்தும் ஆங்கிலத்தில் தான் பதில்கள் வருவதாக இருந்தது. ஆங்கிலம் வேண்டாம் என்று சொல்லவில்லை. கேட்டவர்கள் என்ன மொழியில் கேட்டார்களோ அந்த மொழியில் பதில் வந்தால்தான் பயனுடையதாக இருக்கும். ஆதலினால் அந்த முறையைக் கைக்கொள்ள வேண்டுமென்று நீங்கள் வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. எம் பக்தவத்சலம்: விடைகள் தமிழில் ஆக்கப் பட்டிருக்கின்றன. ஆகவே தமிழில் கொடுக்கப்பட்ட கேள்விகளுக்கு என் சக அமைச்சர்கள் ஆங்கிலத்தில் பதில் சொன்னாலும் கூட தமிழிலும் கூற வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கனம் சபாநாயகர்: நேரம் அதிகமாவதால் தமிழிலே கேட்டால் தமிழிலே சொல்லிவிட்டால் நல்லது.

III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1965-66—*cont.*

MR. SPEAKER : I would like to know whether hon. Member Sri Ramachandra Rayar wants to continue his speech.

SRI A. RAMACHANDRA RAYAR : Yes, Sir.

MR. SPEAKER : From the note given to me, I find that the hon. Member had spoken for nine minutes yesterday. So, the hon. Member may speak for three minutes today.